Speed post

| | |
|---|---|
| அனுப்புநர்<br>முனைவர்.ஆ.அனிதா,<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>முதன்மைக் கல்வி அலுவலகம்,<br>சென்னை–08 | பெறுநர்<br>இயக்குநர்,<br>மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை–6 |

-----

ந.க.எண். 3680 / ஈ 1 / 2020 நாள்.29.12.2020

அய்யா,

பொருள் : பள்ளிக் கல்வி – சென்னை–15, சைதாப்பேட்டை, தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியின் அங்கீகாரம் திரும்ப பெறுதல் மற்றும் மூடவும் ஆணை வேண்டி கருத்துரு சமர்பித்தல் – சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 046846/ஜி1/இ1/2020 நாள். 17.12.2020

-----

சென்னை–15, சைதாப்பேட்டை, தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை திரும்ப பெறுவது மற்றும் மூடுவதற்கும் ஆணை வேண்டி பள்ளி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவினை பின்வரும் விவரங்களின் அடிப்படையில் பரிந்துரை செய்து இத்துடன் இணைத்து பணிந்து அனுப்புகிறேன்.

1. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் ஆணை ந.க.எண். 4803/அ2/2014 நாள். 08.09.2014 ன் படி தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு LKG முதல் 12ம் வகுப்புகளுக்கு 01.06.2013 முதல் 31.05.2016 வரையிலான காலங்களுக்கு தற்காலிக அங்கீகாரம் சான்று வழங்கப்பட்டுள்ளது.
2. பள்ளி நிர்வாகம் தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியை மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் CBSE பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாத்திமா சென்ட்ரல் சீனியர் செகண்டரி பள்ளியாக மாற்றம் செய்துள்ளது.
3. மத்திய கல்வி வாரியத்தின் கடிதம் எண். CBSE/Aff/1930642 (SL-00582-1516)/2015/954885 dated. 20.10.2015 ன் படி upto Secondary Level -க்கு 01.04.2015 to 31.03.2018 வரையிலான காலங்களுக்கும், கடிதம் எண். CBSE/Aff/1930642(SL-007481617/2017/1265314,நாள்.20.06.2017 ன் படி Senior Secondary School –க்கு 01.04.2017 முதல் 31.03.2020 வரையிலான காலங்களுக்கும் இணைப்பு ( Affiliation)வழங்கப்பட்டுள்ளது.

4. பள்ளி அறக்கட்டளையின் சார்பில் சென்னை–15, சைதாப்பேட்டை, தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியை CBSE பாடத்திட்டத்தின் அடிப்படையில் Fathima Central Senior Secondary School என மாற்றம் செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தீர்மானம் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

எனவே , சென்னை –15, சைதாப்பேட்டை , பாத்திமா சென்ட்ரல் சீனியர் செகண்டரி பள்ளிக்கு பள்ளிக் கல்வி துறையின் தடையின்மைச் சான்று மற்றும் ஆரம்ப அங்கீகாரச் சான்று பெற்றிடும் பொருட்டு சென்னை–15, சைதாப்பேட்டை, தி பாத்திமா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியின் அங்கீகாரத்தினை திரும்ப பெறுவது மற்றும் மூடுவது சார்பான ஆணை வழங்கிட பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு : கருத்துரு

29/12/2020

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை–8.

நகல் :

1. இயக்குநர் , பள்ளிக் கல்வி இயக்ககம் , சென்னை–06 , பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தாளாளர், பாத்திமா சென்ட்ரல் சீனியர் செகண்டரி பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை–15

29/12/20